பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 31 | திங்கட்கிழமை | 16.09.2024 | அதிர்வு 045

## யாழில் யுவதி சடலமாக மீட்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இளம் யுவதி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ். கொட்டடி பகுதியைச் 06

# சஜித்துக்கு ஆதரவு தெரிவித்து மேடையேறிய சுமந்திரன் எம்.பி.





(ந.லோகதயாளன்)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேடையேறினார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய 05

### தமிழ்ப் பொது வேட்பாளரைத் தூக்கி வீசி விட்டு

# சஜித்துக்கே தமிழர்கள் வாக்களிக்க வேண்டும்!

### யாழ். பரப்புரைக் கூட்டத்தில் சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

(ந.லோகதயாளன்)

“தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு மாயமானுக்கு மயங்காமல்அதனைத்தூக்கிவீசிவிட்டுஐக்கியமக்கள்சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார். 06



# மாகாண சபைத் தேர்தலை மிக விரைவில் நடத்துவோம்

### யாழ்ப்பாணத்தில் சஜித் உறுதி



“மக்கள் எமக்கு ஆணை தந்தால் ஒன்றிணைந்த நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வுக்காக குறுகிய காலத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம். மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ள அனுமதி இல்லை. வடக்கு, கிழக்கு மக்களுக்காக நன்கொடையாளர்கள் மாநாட்டைக் கூட்டுவோம். வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா. கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசின் வீட்டுச் சின்னத்தில் களமிறங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளர் பட்டியலில் தலைமை வேட்பாளர் அவர்தான்.

ஆனால், யாழ் மாவட்ட மக்கள் தமிழரசு பட்டியலின் தலைமை வேட்பாளருக்கு ஆறாவது இடத்தை தந்து வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். அந்த மக்களின் முடிவு சரியானதுதான் என்பதை அவர் இப்போதும் திரும்பத் திரும்ப செயலில் நிரூபித்து வருகின்றார்.

பொது வேட்பாளர் என்று கூறப்படுபவரை ஆதரிப்பது இல்லை என அவரது தமிழரசுக் கட்சியின் கொள்கை முடிவுகளை எடுக்கும் அதிகாரமிக்க மத்திய 06



# இலங்கை மக்கள் தெரிவு செய்யும் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட எதிர்பார்க்கும் அமெரிக்கா

இலங்கை மக்கள் தெரிவு செய்யும் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எக்ஸ் பதிவின் ஊடாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இதனை கூறியுள்ளார்.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவது இலங்கையின் ஜனநாயகத்திற்காக ஆற்றப்பட வேண்டிய முக்கிய கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




# எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் அடுத்த மாதம் 26 ஆம் திகதியன்று

## வர்த்தமானி அறிவித்தல் வெளியானது

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை அடுத்த மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அந்தத் தினத்தில் காலை ஏழு மணி முதல் பிற்பகல் நான்கு மணிவரை வாக்களிப்பு இடம்பெறும்.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை கடந்த 12 ஆம் திகதி நிறைவடைந்தது.

அதற்கமைய, 9 அரசியல் கட்சிகளும் இரண்டு சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைச் சமர்ப்பித்திருந்தன.

# வருடத்தின் முதல் 7 மாதங்களில் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு!

இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 5.6 சதவீதமும், இறக்குமதி செலவு 9.1 சதவீதமும் அதிகரித்துள்ளது.

இந்த காலப்பகுதியில் எரிபொருளுக்காக அதிகளவில் இறக்குமதி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, மேற்படி 7 மாதங்களில் எரிபொருள் இறக்குமதிக்காக 2 ஆயிரத்து 548 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பெருந்தோட்ட மக்களை ஏமாற்றி வாக்குகளை சூறையாட முயற்சி!

## தலவாக்கலையில் அநுர குற்றச்சாட்டு

பெருந்தோட்ட மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தலவாக்கலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“சாதாரண பொது மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் அரசியல் கலாசாரமே காணப்படுகிறது.

நாட்டு மக்கள் வறுமையின் காரணமாக வாழ்வதற்கு வழியின்றி தவிக்கின்றனர்.

ஆனால் ஆட்சியாளர்கள் அந்த மக்களுக்கு உணவை வழங்கி வாக்குகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

அதுமாத்திரமன்றி பெருந்தோட்ட மக்களை அச்சுறுத்தி வாக்குகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

பெருந்தோட்ட மக்கள் இன்று தொண்டமான்களுக்கு அஞ்சி வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தலைமைகளுக்கு அஞ்சி வாழவேண்டிய அவசியமில்லை.

சிறுவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தையும், எமது மக்களுக்கு சிறந்த வாழ்க்கை முறைமையையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை முறைமையை நோக்கினோமானால், வாழ்வதற்கு உரிய குடியிருப்புகள் இல்லை. மலசலகூட வசதிகள், வீதிகள் உரிய முறையில் காணப்படவில்லை. மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான வசதியில்லை. அதுமாத்திரமன்றி, பெருந்தோட்ட மக்களுக்கு உரிய வேதனம் வழங்கப்படுவதில்லை.

தேர்தல் நெருங்கும் சந்தர்ப்பத்தின் போது மாத்திரம் ஆட்சியாளர்கள் பெருந்தோட்ட மக்களின் வேதனத்தை அதிகரிப்பதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

நபர் ஒருவர் வாழ்க்கை நடத்துவதற்கு உரிய வேதனத்தை வழங்க முடியாது எனில், அந்த தொழிற்துறையால் பெற்ற பலன் என்ன?”– என்றார்.















# யாழ்ப்பாணத்தில் சஜித்தின் பிரசாரம்

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு பிரசாரக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், மானிப்பாய் பிரதேசத்தில் நடைபெற்றது.

தொடர்ச்சி▼




# யாழ்ப்பாணத்தில் சஜித்தின் பிரசாரம்

தொடர்ச்சி▲







# தமிழ்ப் பொது வேட்பாளர் அரியம் முன்னிலையில் மாவை பிரசன்னம்



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா நேரில் சென்று சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்ப் பொது வேட்பாளரின் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

மேற்படி சந்திப்பில் தற்போதைய தேர்தல் கள நிலவரம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்று தெரியவந்துள்ளது.

## சஜித்துக்கு ஆதரவு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் – மானிப்பாய் பிரதேசத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேடையேறிய சுமந்திரன் எம்.பி., ஜனாதிபதி வேட்பாளர் சஜித்துக்கு ஆதரவு தெரிவித்து உரையாற்றினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்குத் தீர்மானித்திருந்தது.

இதையடுத்து அந்தத் தீர்மானம் தொடர்பாகக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்டவர்கள் மாற்றுக் கருத்துக்களை வெளியிட்டிருந்தாலும், அந்தத் தீர்மானத்தில் எந்த வித மாற்றமும் இல்லை என்று குறிப்பிட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் விசேட ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

இந்தநிலையில், சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாகத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. நேற்று யாழ்ப்பாணத்தில் மேடையேறி உரையாற்றினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழு தீர்மானித்திருக்கின்றது. பொது வேட்பாளரை போட்டியிலிருந்து விலகும் படியும் அது தீர்மானம் மூலம் கோரி இருக்கின்றது.

தவிரவும், ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கவும் கட்சியின் மத்தியகுழு தீர்மானித்திருக்கிறது.

அப்படி இருக்க, சஜித்துக்கு எதிரான ரணில் விக்கிரமசிங்கவைத் தமது வீட்டுக்கு வரவேற்று 'டீல்' பேசுகின்றார் மாவையர்.

கட்சி தேர்தலில் இருந்து விலகக் கோரிய பொது வேட்பாளரைத் தாம் தேடிச்சென்று சந்தித்துத் தமது கட்சியை இழிவுபடுத்துகிறார்.

ரணிலுடன் செய்து கொண்ட டீல் படியான வரும்படிக்கு நன்றியாக கட்சியின் மத்திய குழுவின் முடிவை மாற்றி வேறு அறிக்கை ஒன்றை வெளியிடத் துடியாய்த் துடிக்கின்றார்.

தந்தை செல்வாவுக்கும் தளபதி அமிருக்கும் பக்கத்தில் இருந்து அரசியல் படித்திருந்தால் இப்படிச் சுத்துமாத்துப் பண்பு வந்திருக்காது.

இன்று மாவையிடம் பிரதிபலிப்பது மேற்படி மகத்தான மனிதர்களுடன் - அரசியல் தலைவர்களுடன் - பழகியமையால் வந்த நற்பண்புகள் அல்ல.

மாறாக, அரசியல் சுயநலமும், பதவி ஆசையும், நோட்டுக்களுக்கு பின்னால் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரியும் இழிந்த பண்புகளும்தான்.

இவர் தலைமையில் தமிழரசு இனி மேல் உருப்படப் போவதில்லை என்பது நிச்சயம்.

தமிழரசு வரலாற்றில் - இல்லை, இல்லை... தமிழர் வரலாற்றில் - ஒரு கட்சித் தலைவர் எப்படி செயல்படக் கூடாது என்பதற்கு மாவை ஒருவரே நல்ல உதாரணம்.

\+ \+ \+

நாடாளுமன்றத் தேர்தலில் காற்றுக் கழன்று போன ஒருவருக்கு ஆளுநர் பதவியில் கண் வந்துவிட்டது என்று உள்வீட்டுத் தகவல் ஒன்று கசிந்துள்ளது. தேர்தலை எதிர்கொள்ளாமல் பதவியை ருசிக்க ஆசை. ரணில் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் தமக்கு அது கிட்டுமென்று நம்புகின்றாராம்.

ரணிலின் வெற்றியை உறுதிப்படுத்த சஜித்தை வீழ்த்த வேண்டும் என்பது தமிழர் தரப்பில் சில பிரகிருகளின் கணக்கு. தத்துவம். நாம் குறிப்பிடும் பிரகிருதியும் அதற்கு விதிவிலக்கு அல்லர்.

சஜித்தை விழுத்தி, ரணில் மீதான விசுவாசத்தைக் காட்டுவதற்காக தமது கட்சியின் முடிவுக்கு மாறாக, தமது தொகுதிக் கிளை ஆதரவை பொது வேட்பாளருக்கு திருப்பி விட்டதாக அறிவித்திருக்கின்றார்.

தொகுதிக் கிளை தனது கட்டுப்பாட்டில் இருப்பதாக அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார். வாக்களிப்பு முடிவுகள் வெளியாக அவருக்கு விடயம் புரியும் என்று நம்புவோம்.

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"வைன் ஸ்டோர்ஸ் அனுமதிப்பத்திரம், மதுபானசாலை அனுமதிப் பத்திரம் என்பனவற்றைப் பெற்றுக்கொண்டவர்கள் எம்மிடம் இல்லை. விசேட வரங்களையும் வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொண்டவர்கள் எம்மோடு இல்லை. இன, மத, குல, கட்சி பேதங்களின்றி நாட்டை கட்டியெழுப்புவதற்காக இணைந்து கொண்டவர்களே எம்மோடு இருக்கின்றார்கள்." - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு பிரசாரக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம், மானிப்பாய் பிரதேசத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம். நல்லிணக்க செயற்பாடுகளின் ஊடாகவே பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர முடியும். தொடர்ந்தும் அலறிக் கொண்டிருக்கின்ற பிரச்சினையை வைத்திருக்க முடியாது. அது நாட்டின் ஐக்கியத்தைப் பாதிக்கின்றமையால் நல்லிணக்கத்தை மையப்படுத்தி இளைஞர்களை வலுப்படுத்தும் வேலைத் திட்டத்தை முன்னெடுப்போம்.

கோட்டாபயவும் ரணிலும் நிறுத்திய வீட்டுத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்போம். தொழில் செய்கின்றவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவோம். பாடசாலைகளையும் வைத்தியசாலைகளையும் மேம்படுத்துவோம். இளைஞர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவோம்." - என்றார்.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

---

## சஜித்துக்கே தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியில் நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் மேடையேறி உரையாற்றும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தீர்மானத்துக்கமைய உத்தியோகபூர்வமாக முதன் முதலாக மேடையேறியுள்ளேன். கடந்த முதலாம் திகதி நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் 2024 ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றோம்.

நான் இதனைச் சொல்வதற்குப் பல காரணங்கள் உண்டு. தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்த போதிலும்கூட எமது கட்சிக்குள்ளேயே பலவிதமான சலசலப்புக்கள் ஏற்பட்டிருப்பதனை நீங்கள் அறிவீர்கள். மிகச் சொற்ப அளவிலான எண்ணிக்கையானவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு மாயமானுக்கு மயங்கி அதனை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றார்கள். அப்படியான முயற்சியிலே எங்களுடைய கட்சி ஈடுபட்டது கிடையாது. அதிலே எங்களது எந்தப் பங்களிப்பும் கிடையாது.

உதிரிகள் எல்லாம் சேர்ந்து பெரிய தொரு திட்டத்தை வகுத்து இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முயற்சியை ஆரம்பித்தபோதே எங்கள் கட்சியின் மத்திய செயற்குழுவினர் 5 தடவைகள் கூடி சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்ற முடிவை எடுத்திருக்கின்றோம். முதல் கூட்டத்திலேயே இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற அபாயத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் எனச் சொன்னோம். இறுதியிலே "இலங்கைத் தமிழரசுக் கட்சியை எப்படியும் நாங்கள் வழிக்குக் கொண்டு வருவோம்" எனச் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் அது முடியாமல்போன காரணத்தினாலே எங்களுடைய கட்சியில் இருந்தே ஒருவரைப் பிரித்தெடுத்து அவரைத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்னும் நாமம் சூட்டி முன்னிறுத்தியிருக்கின்றார்கள்.

அவருக்கு எதிராக நாங்கள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அவரிடத்தில் விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. எங்கள் கூட்டங்களுக்கு அவர் வருவதற்கு நாங்கள் தடை விதித்திருக்கின்றோம். அவருடன் இணைந்து பிரசாரத்தில் ஈடுபடும் எங்கள் உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்து தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம். இவை பொதுவெளியிலே சொல்லப்பட வேண்டும்.

எங்கள் கட்சியின் உத்தியோகபூர்வ முடிவை மலினப்படுத்தும் வகையில் பலர் இன்று செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அவர்களை என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி பின்னர் தீர்மானிப்போம். ஆனால், நெருங்கி வந்திருக்கின்ற இந்த ஜனாதிபதித் தேர்தலிலே வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு மட்டும்தான் என்பதை உறுதியாகக் கட்சியின் சார்பிலே உத்தியோகபூர்வமாகப் பொது மேடையிலே அறிவிப்பதில் நான் பெருமைப்படுகின்றேன்.

தேர்தலைப் பகிஷ்கரிப்பதோ, தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற மாயமானுக்கு வாக்களிப்பதோ உங்களுடைய பொன்னான வாக்கை நீங்களே குழி தோண்டிப் புதைத்து வைக்கின்ற செயலாகவே இருக்கும். ஜனநாயகத்திலே ஒவ்வொரு வாக்களிக்கும் சந்தர்ப்பம் வருகின்றபோதுதான் பிரஜைக்குத் தான் அளிக்கின்ற புள்ளடி நாட்டிலே ஒரு மாற்றத்தை, தான் விரும்புகின்ற ஆட்சியாளனைக் கொண்டு வருகின்ற உரித்தை வழங்குகின்றது. இதை இல்லாமல் செய்யும் கோஷமே பகிஷ்கரிப்பு மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் கோஷம்." - என்றார்.

---

## யாழில் யுவதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த கலைச்செல்வன் யதுசாயினி என்ற 22 வயது யுவதியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் வெளியே சென்றிருந்த நிலையில் மேற்படி யுவதி நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் தனியாக வீட்டில் இருந்துள்ளார். வெளியே சென்றவர்கள் வீடு திரும்பிய வேளை அந்த யுவதி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

உடற்கூற்றுப்பரிசோதனைகளுக்காகச் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



# வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அதிகம் அபிவிருத்தி செய்யப்படும்

## கிளிநொச்சியில் மக்கள் வெள்ளத்துக்கு மத்தியில் சஜித் உறுதி

“மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, வேறெந்த தலைவர்களும் முன்னெடுக்காத வகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி செய்யப்படும்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“வடகிழக்கு மக்களை மையப்படுத்தியதாக சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாடு எமது ஆட்சியில் கூட்டப்படும்.

தொடர்ச்சி▼














# வடக்கு – கிழக்கு மாகாணங்கள் அதிகம் அபிவிருத்தி செய்யப்படும்

## கிளிநொச்சியில் மக்கள் வெள்ளத்துக்கு மத்தியில் சஜித் உறுதி

தொடர்ச்சி▲

அதனூடாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு பிரதேசத்தில் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு 9 மாகாணங்களையும் அபிவிருத்தியடையச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

5 தடவைகள் பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வடகிழக்கு மக்களைச் சந்திக்கிறார்.

அவரினால் வடகிழக்கு மக்களுக்காக நன்கொடையாளர்கள் மாநாட்டைக் கூட்ட முடியுமாக இருந்தாலும், அதற்கான இயலுமை அவரிடம் இல்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கு அந்த இயலுமை உள்ளது.

எனவே ஐக்கிய மக்கள் கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாடு கூட்டப்படும்.

சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளையும் உள்ளடக்கிய வகையில் புதிய கல்வி முறை ஒன்றினூடாக சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவோம்.

அத்துடன், நாட்டில் உள்ள வைத்தியசாலைகள் கட்டமைப்பானது, உயர்தரத்திலான சகல வசதிகளையும் கொண்ட புதிய வைத்தியசாலை கட்டமைப்பாக மாற்றப்படும்.” – என்றார்.



# சுற்றுலாப்பயணிகள் வருகை அதிகரிப்பு

இந்த மாதத்தின் கடந்த 11 நாள்களில் மாத்திரம் 44 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர்.

இதன்படி இந்த காலப்பகுதியில் 44,977 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அத்துடன், பிரித்தானியா, ஜேர்மனி, சீனா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்தும் சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நெருக்கடியை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கைத் திட்டம்

இந்த முறை ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி, வேட்பாளர்களிடையேயான போட்டி மிகக் கடுமையாக இருந்தாலும் - தேர்தல் விதிமுறை மீறல்கள் எல்லை மீறி இடம் பெற்றாலும் - வாக்களிப்புக்கு முந்திய வன்முறைகள், வன்செயல்கள் ரொம்பவும் குறைவாகவே உள்ளன. நிலைமை முழுக் கட்டுக்குள் தான் உள்ளது.

ஆனால், வாக்களிப்பின் பின்னர் நிலைமை தலைகீழாக மாறலாம் என்ற எச்சரிக்கை பல தரப்புகளினாலும் முன்வைக்கப்படுகின்றன. புலனாய்வு வட்டாரங்களும் இத்தகைய முன்னெச்சரிக்கை உளவுத் தகவல்களை முன்வைத்திருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் -

ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு நாள் மற்றும் முடிவுகள் அறிவிக்கப்படும் போது நாட்டில் ஏற்படக்கூடிய எந்தவொரு அவசர நிலையையும் எதிர்கொள்வதற்காக பொலிஸாரையும் ஆயுதப்படையினரையும் இணைத்து 'அவசரகால திட்டம்' ஒன்றை தயாரிப்பதற்கு பாதுகாப்பு பிரதானிகளுக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார் என சில செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வாக்களிப்பின் பின்னர் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவசர நிலை ஏற்படக்கூடும் எனப் பாதுகாப்பு சபைக் கூட்டத்தின் போது பாதுகாப்பு பிரதானிகள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியமையை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதன்படி, எந்தவொரு அவசரநிலையிலும் பொலிஸாருக்கு உதவியாக இராணுவத்தை நிலைநிறுத்துவது குறித்தும், அவசரநிலையில் இராணுவம் தனது அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் நாயகத்துடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

முப்படை தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர்கள் தலைமையில் பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் தலைமையில் அவசரகால பாதுகாப்பு திட்டம் தயாரிக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் -

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன, பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, படைத் தளபதிகள் ஆகியோர் பங்குபற்றும் விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ளது எனக் கூறப்பட்டது.

அங்கு எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதியின் தலைமையில் தேர்தலுக்கு முன்னர் அவசர பாதுகாப்புச் சபைக் கூட்டமும் நடத்தப்பட உள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆயினும், தேர்தலை அடுத்து நாட்டில் நெருக்கடி ஏற்படக் கூடிய சமயத்தில் அதிகாரக் கைமாறலுக்கான சாத்தியமும் தவிர்க்க முடியாததாக இருக்கலாம். அப்போது புதிதாக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் தரப்பு ஒன்று இருக்குமாயின் அதன் வழிகாட்டலிலும் பாதுகாப்புத்தரப்புசெயற்படவேண்டியிருக்கும். பாதுகாப்பு முன்னேற்பாட்டு ஒழுங்குகளில் அதற்கும் இடமளித்துத்தான் திட்டமிடல் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்படித் திட்டமிடுவார்கள் என நம்புவோம்.

# கேஜ்ரிவாலின் இராஜினாமா முடிவு: டில்லியின் அடுத்த முதல்வர் யார்?



டில்லி மதுபான கொள்கை ஊழல் தொடர்பாக டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு எதிராக சி.பி.ஐ. தொடர்ந்த வழக்கில் அவருக்கு உச்ச நீதிமன்றம் கடந்த 13 ஆம் திகதி பிணை வழங்கி உத்தரவிட்டது.

இதையடுத்து சிறையிலிருந்து அவர் அன்று மாலையே வெளியே வந்தார்.

இதனையடுத்து, நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அடுத்த 48 மணி நேரத்துக்குள் முதல்வர் பதவியை இராஜினாமா செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளார். இது டில்லி அரசியல் சூழலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், முதல்வர் பதவியை கேஜ்ரிவால் இராஜினாமா செய்த பிறகு டில்லியில் அடுத்த முதல்வர் என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது. இதில் ஆம் ஆத்மி கட்சியின் சில முக்கிய புள்ளிகளின் பெயர்களும் அடிபடத் தொடங்கியுள்ளன.

**அதிஷி:**

அரவிந்த் கேஜ்ரிவால் கைதுக்குப் பிறகு செய்திகளில் அதிகம் இடம்பெற்றவர் ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், டில்லி அமைச்சருமான அதிஷி. ஒரு நிழல் முதல்வராக இருந்து பல்வேறு முக்கிய துறைகளை கவனித்துக் கொண்டார். ஆம் ஆத்மி கட்சியில் சிறந்த பேச்சாளர்களில் ஒருவரான இவர், டில்லியின் அடுத்த முதல்வர் பட்டியலில் முன்னிலையில் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**கைலாஷ்:**

டில்லியின் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கும் கைலாஷ், டில்லி அரசியல் வட்டாரத்தில் ஒரு முக்கியப் புள்ளியாக பார்க்கப்படுபவர். மின்சார வாகனங்களை அறிமுகம் செய்தது, பஸ் சேவை விரிவாக்கம் என டில்லி அரசின் பல முக்கிய திட்டங்களின் பின்னணியில் இருந்தவர். கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், நீண்ட அரசியல் அனுபவமும் கொண்டவரான இவருக்கும் டில்லி முதல்வராக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

**சுனிதா கேஜ்ரிவால்:**

அரவிந்த் கேஜ்ரிவாலின் மனைவியான சுனிதா, முன்னால் ஐ.ஆர்.எஸ். அதிகாரி. 20 ஆண்டுகளுக்கும் மேலாக வருமான வரித்துறையிலும் பணியாற்றிவர். கடந்த மக்களவைத் தேர்தலில் டில்லி, ஹரியானா, குஜராத் மாநிலங்களில் ஆம் ஆத்மி கட்சியின் முக்கிய பிரச்சாரகர்களின் ஒருவராக இருந்தவர். கேஜ்ரிவால் சிறையில் இருந்தபோது தொடர்ந்து ஊடகங்களில் தோன்றி தன் கணவரது செய்திகளை தெரிவித்ததன் மூலம், மக்களுக்கு பரிச்சயமானவராக அறியப்படுகிறார்.

**கோபால் ராய்:**

டெல்லி அரசியலில் அனுபவம் வாய்ந்த மற்றொரு நபர். சுற்றுச்சூழல் அமைச்சராக இருக்கும் கோபால் ராய், தன்னுடைய இளம் வயதில் மாணவர் போராட்டத்தின் போது கையில் சுடப்பட்டு பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர். மார்க்சிஸ்க் கொம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து தன்னுடைய அரசியல் பயணத்தை தொடங்கிய இவருக்கு உழைக்கும் வர்க்கத்தினர் மத்தியில் நல்ல அறிமுகம் உண்டு.



# மண்சரிவில் சிக்கித் தவித்த 30 பேர் பாதுகாப்பாக மீட்பு

உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கித் தவித்த 30 பேரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி 30 பேரும் உத்தரகாண்ட் மாநிலத்தின் ஆதி கைலாஷ் பகுதிக்கு பயணம் மேற்கொண்ட போது தவாகாட்-தானாக்பூர் நெடுஞ்சாலைக்கு அருகில் வைத்துத் திடீரென மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் அவர்கள் மலைப்பகுதியிலிருந்து கீழே வரமுடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து மண்சரிவினால் சிக்கித் தவித்த 30 பேரும் உலங்கு வானூர்தி மூலம் பாதுகாப்பான முறையில் மீட்கப்பட்டனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மீட்கப்பட்ட 30 பேரும் இன்று இரவு சென்னைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# ஈரான் ஆதரவு ஹவுதி கிளர்ச்சியாளர்களால் இஸ்ரேல் மீது பலஸ்டிக் ஏவுகணை தாக்குதல்







ஈரான் ஆதரவு ஹவுதி கிளர்ச்சியாளர்களால் இஸ்ரேல் மீது பலஸ்டிக் ஏவுகணை ஒன்று ஏவப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதல் தொடர்பில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, வடக்கு ஏமனை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பெரும் பதிலடியை சந்திக்க நேரிடும் என எச்சரித்துள்ளார்.

மத்திய இஸ்ரேலுக்கு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இவ்வாறான தாக்குதலை முன்னெடுத்த முதல் தடவையாக இது தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், மேற்படி தாக்குதலுக்கு 2,040 கிலோமீற்றர் தூரம் சென்று தாக்கும் ஹைபோசோனிக் பாலிஸ்டிக் ஏவுகணை பயன்படுத்தப்பட்டதாக ஹூதியின் செய்தி தொடர்பாளர் யாஹ்யா செரியா தெரிவித்துள்ளார்.

ஹைபோசோனிக் பாலிஸ்டிக் ஏவுகணையானது அந்த தூரத்தை கடக்க வெறும் 11 1/2 நிமிடங்கள் மட்டுமே எடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ஏவுகணையின் பாகங்கள் மத்திய இஸ்ரேலில் உள்ள பண்ணை ஒன்றில் விழுந்துள்ளதுடன் உயிரிழப்புகள் ஏதும் பதிவாகவில்லை.

இந்த ஆண்டு ஜூலை மாதம், ஹவுதி போராளிகள் முதல் முறையாக இஸ்ரேல் மீது ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் நான்கு பேர் காயமடைந்தனர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. அதில் 6 பேர் உயிரிழந்ததுடன், 80 பேர் காயமடைந்துள்ளனர்.

# பணயக் கைதிகளை மீட்கக்கோரி இஸ்ரேலில் பேரணி நடத்தப்பட்டது




காசாவில் பணயக் கைதிகளாகச் சிறை பிடிக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை துரிதப்படுத்துமாறு கோரி, இஸ்ரேலின் டெல் அவீவ் நகரில் எதிர்ப்பு பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த பேரணியில் ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் பங்கேற்றுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத் தலைமையகம் மற்றும் ஏனைய அரசாங்கக் கட்டடங்களை அண்மித்த பகுதியில் ஒன்று கூடிய எதிர்ப்பாளர்கள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

அத்துடன், பணயக் கைதிகளை மீளப் பெறுவதனை உறுதி செய்வதற்கான உடன்பாட்டை எட்டுமாறும் வலியுறுத்தியுள்ளனர்.



# வாக்கு மோசடியில் ஈடுபடுவோருக்கு 2 லட்சம் ரூபா அபராதத் தொகை

வாக்கு மோசடியில் ஈடுபடுவோருக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை 2 லட்சம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கு அமைவாக அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகளுக்கு அபராதத் தொகைக்கு மேலதிகமாக ஒரு வருடத்திற்கும் மேற்படாத விளக்கமறியல் விதிக்கப்படுமென தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்கு மோசடியில் ஈடுபடுவோருக்கு 1981 ஆம் ஆண்டின் 15 இலக்க சட்டத்தின் 76 ஆவது சரத்திற்கு அமைவாக இதற்கு முன்னர் 500 ரூபா அபராதத் தொகை அறிவிக்கப்பட்டிருந்தது.

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 'பவ்ரல்' அமைப்புக்கு 1,300 முறைப்பாடுகளாம்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 1300-இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இவற்றில் வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடைய 62 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளொயுடன் 19 தாக்குதல் சம்பவங்களும் அலுவலகங்கள் மீதான 27 தாக்குதல் சம்பவங்களும் உள்ளடங்குகின்றன என அவர் கூறியுள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து வகையான பிரசார நடவடிக்கைகளும் எதிர்வரும் 18 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைவதாக கூறியுள்ள ரோஹண ஹெட்டியாராய்ச்சி, இந்த காலப்பகுதியில் அமைதியான முறையில் செயற்படுமாறு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், இம்முறை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளில் 15 -இற்கும் மேற்பட்ட சர்வதேச பிரதிநிதிகள் ஈடுபடவுள்ளனர் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# சட்டத்தரணிகள் சங்கத்திற்கு பதில் தலைவராக மத்தேகொட

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன உடனடியாக பதவி விலகியமையை அடுத்து அந்தச் சங்கத்தின் பதில் தலைவராக அனுர மத்தேகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன கடந்த 13 ஆம் திகதி பதவி விலகினார்.

ஜப்பான் ஜய்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆலோசனை சேவை திட்டம் தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன நம்பிக்கை மோசடியில் ஈடுபட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



# தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகளை 40 நாள்களுக்குள் வெளியிட எதிர்பார்ப்பு

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை 40 நாள்களுக்குள் வெளியிட எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன எனப் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நேற்று இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் 2,849 மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெற்றன எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைக்கு 323,879 பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளனர் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.



# கொக்கோ, கராம்பு, மிளகு உற்பத்தி சார் தொழிலாளருக்கு நாளாந்தம் 1,856 ரூபா

கொக்கோ, கராம்பு, மிளகு தொழிற்றுறையில் ஈடுபடுவோருக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளாந்த கொடுப்பனவு தொடர்பில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தொழில் ஆணையாளர் நாயகம் எச்.கே.கே.ஏ.ஜயசுந்தரவின் கையொப்பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய கொக்கோ, கராம்பு, மிளகு உற்பத்தி சார் தொழிலாளர்களுக்கான நாளாந்த கொடுப்பனவாக 1,856 ரூபா 19 சதம் அறிவிக்கப்பட்டுள்ளது.



# மட்டக்களப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் முதல் நாள் நினைவேந்தல் நிகழ்வு!





(மாமாங்கம் நிருபர்)

தியாகதீபம் திலீபனின் 37 ஆவது வருட நினைவேந்தலை முன்னிட்டு மட்டக்களப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தலைமையில் அன்னராது திருவுருவ படத்திற்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தி முதல் நாள் திலீபன் வாரத்தை ஆரம்பித்து வைத்தனர்.

கடந்த 1987 ஆம் ஆண்டு இந்திய – இராணுவத்துக்கு எதிராகப் பல கோரிக் கைகளை முன்வைத்து யாழ் நல்லூர் பகுதியில் தியாக தீபம் திலீபன் உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்து உயிர்நீத்தார்.

திலீபனின் 37 ஆவது நினைவேந் தலையிட்டு அவர் உண்ணாவிரதம் ஆரம்பித்த நேற்றைய நாள் முதல் தீலீ பன் வாரமாக அறிவித்து நினைவேந் தல்கள் இடம்பெற்று வந்தன. இதன டிப்படையில் தீலிபன் வாரத்தையிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் த.சுரேஷ் தலைமையில் நினைவேந்தல் வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டு திலீபன் திருவுருவப் படத்திற்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மலர் தூவி மௌன அஞ்சலி செலுத்தி னர்.

# யாழ். பள்ளிவாசலில் இன்று அறிவுக்களஞ்சியப் போட்டி

மீலாத் விழாவை முன்னிட்டு யாழ்ப் பாணத்தில் அறிவுக்களஞ்சியப் போட்டி நடைபெற இருக்கின்றது

யாழ்ப்பாணம் மொஹைடீன் தக்கியா சிவலபள்ளி மீலாத் விழா கொமிட்டியின் ஆதரவில் பள்ளியில் இன்று திங்கட் கிழமை இரவு 8 மணிக்கு மாணவர் கள் மத்தியில் இப்போட்டி நடைபெறும்

யுஊதுரு நிறைவேற்றுக் குழு உறுப் பினர் அஷ்ஷேக் ஆஆ. இர்பான் (நூரி), அஷ்ஷேக் யு.ஆ. றழீம் (மக்கி) ஆகியோருடன் கலாபூஷணம் பரீட் இக்பாலும் இணைந்து இந்த அறிவுக் களஞ்சியப் போட்டியை நடத்துவர்.





# நுவரெலியாவில் ரணிலின் பிரசாரக் கூட்டம் நேற்று மக்கள் வெள்ளமெனத் திரண்டனர்!

2024 ஜனாதிபதி தேர்தல் சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நுவரெலியா மாவட்டத்தில் நேற்று "இயலும் ஸ்ரீலங்கா" ஜனாதிபதி வெற்றிப் பேரணி பிரச்சார கூட்டம் இடம் பெற்றது.

அமைச்சரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தலைமையில், நுவரெலியா மணிக்கூட்டு கோபுரத்தின் அருகில் நடைபெற்ற இப்பிரச்சார பேரணிக் கூட்டத்தில், பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் நிரம்பியது அந்தப் பிரதேசம்.

இதன் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , அமைச்சர் ஜீவன் தொண்டமான், இ.தொ.கா. தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.கா செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், சப்ரகமுவ மாகாண ஆளுனர் நவீன் திசாநாயக்க, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இ.தொ.கா. தேசிய அமைப்பாளர், பிரதி தலைவர், பிரதிஒ பொதுச் செயலாளர், உப தலைவர்கள், முன்னாள் பிரதேச சபை தலைவர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துக் கொண்டிருந்தனர்.








# பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் தியாகி திலீபனின் நினைவேந்தல்

பிரான்ஸின் தலைநகர் பாரிஸ் 10 ஆம் வட்டாரத்தில் தமிழர் வர்த்தக மையத்தில் "குட்டி யாழ்ப்பாணம்" எனஅழைக்கப்படு லா சப்பல La Chapelle பகுதில் இன்று நேற்றுக் காலை 9:45 மணிக்கு தொடங்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் வணக்க நிகழ்வுகள் 26ம் திகதி வரை காலை 10:00மணி முதல் மாலை 18:00 மணி வரை நடைபெறும்.

தாயகத்தில் நல்லூரில் அமைக்கப்பட்டு சிங்கள அரசால் அழிக்கப்பட்ட நினைவுத்துபியின் மாதிரி வடிவத்தில் இம்முறை இந் நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் திலீபன் அவர்களின் 12 நாள்கள் உண்ணாவிரதம் இருந்தமை குறித்து விளக்கும் பதாகையும் பிரஞ்சு மொழியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இது பிரஞ்சு மக்களினதும், பாரிஸின் சுற்றாலாவாசிகளினதும் கவனத்தெள ஈர்ப்பதற்காக அமைந்தது.

இந்த நிகழ்வு பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் சே நூ தமிழ் Ç'est Nous les Tamouls அமைப்பால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.










# வங்கக்கடலில் அவதரித்த வல்லிபுர மாயவனுக்கு இன்று தேர்த்திருவிழா!

**- புலோலியூர் வேல்நந்தகுமார் -**

வங்கக்கடலில் அவதரித்தவன் வல்லிநாச்சியார் கனவில் தோன்றியவன். சக்கரத்தாழ்வாராய் துன்னாலை வல்லிபுர பதியில் உறைந்து நம்பி வரும் நல்மாற்றம் தருகின்ற வடமராட்சி வல்லிபுர மாயவனுக்கு இன்று தேர்த்திருவிழா.

ஊர் கூடி தேர் இழுத்தல் என்பதற்கு அமைய வல்லிபுர மாயவனை நம்பி வருகின்ற எல்லா ஊரவரும் சேர்ந்து வடம் பிடித்து இழுத்து வரக் காத்தல் கடவுளாம் கண்ணபிரான் இன்று அழகிய சித்திரத் தேரில் ஆரோகணித்து வல்லிபுர மணல்வெளியில் மக்கள் வெள்ளம் அலைமோத இன்று தேரிலே பவனி வருகிறான்.

பஞ்ச கிருத்தியங்களிலே தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. காத்தல் கடவுள் எம்மை சூழ்ந்து வருத்தும் துயரங்களை எல்லாம் அழிப்பதற்குத் தேரில் வருகிறான். இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து அடியவர்கள் எல்லாம் வந்து ஒன்று கூடி கோவிந்தா, கோபாலா, பரந்தாமா என்று அவன் புகழ் பாடி தேரில் இருக்கும் அற்புதக் காட்சியை கண்ணாரக் காண்போம்.

வல்லிபுரக் கோவில் திருவிழா என்பதும் பக்தர் தம் மனங்களிலே குதூகலத்தை ஏற்படுத்தும் ஒரு திருவிழாக்காலமாகவே அமைகிறது. அதிலும் குறிப்பாக நேற்றைய சப்பறத்திருவிழா, இன்றைய தேர்த்திருவிழா, நாளைய தீர்த்தத்திருவிழா, மறு நாளைய பட்டுத்தீர்த்தத்திருவிழா, அனுமார் மடை என்பன இவ் ஆலயத்தின் சிறப்புத் திருவிழாக்களாக அமைகின்றன.

வெள்ளிப்பாதசரம் என்ற சிறுகதையில் இலங்கையர்கோன் வல்லிபுரக் கோவில் திருவிழாவை களமாகக் கொண்டு அற்புதமான சிறுகதை ஒன்றைப் படைத்துள்ளார். குருக்கட்டு விநாயகர் அருகமைந்திருக்கின்ற சிறப்பும் வல்லிபுரப் பதிக்குண்டு அவ் வண்ய குருக்கட்டு விநாயகரை வழிபட்டு, பின்னர் வல்லிபுர் மாயவனை வழிபடுகின்ற வழிபட்டுச் சிறப்பும் வல்லிபுரப்பதிக்கு உண்டு. அவ்வகையில் குருக்கட்டு விநாயகரை வழிபட்டு அதன் பின்னர் வல்லிபுர மாயவனை வழிபடுகின்ற வழிபாட்டுச் சிறப்பும் இதற்குண்டு.

குருக்கட்டு விநாயகரைத் தேடிச் செல்லும் இரவுத் திருவிழாக் காட்சிகள். அதுபோல வெளி வீதி வலம் வரும் திருவிழாக்களில் கண்ணனின் பல லீலைகளை நாடகமாக கற்கோவளக் கலைஞர்கள் அரங்கேற்றுவர். வடமராட்சி வலய பாடசாலை மாணவர்கள் வடமராட்சி பிரதேச மன்றங்களைச் சேர்ந்த கலைஞர்களின் கலை நிகழ்வுகள் என பல சிறப்பம்சங்களாலும் இந்தத் திருவிழாக் காலம் சிறப்புறும்.

ஆலயத்தைச் சுற்றி இருக்கும் ஆச்சிரமங்கள் முதியோர் இல்லம் போன்றன அடியவர் பசி போக்கும் அன்னதானப் பணி உட்பட பல ஆக்க பூர்வமான பணிகளை முன்னெடுப்பதுவும் சிறப்புக்கு உரியது.

ஞாயிற்றுக்கிழமைகளில் மாயவனின் விசேட நாள்களில் மாமிசம் தவிர்த்து வந்து வழிபடும் வடமராட்சி பிரதேச வாழ் மக்கள் சிறப்பு.

இத்தகைய பல சிறப்புக்களோடு சிவாச்சாரியார்களது சிறப்பான பூசை வழிபாடுகளும் பரிபாலன சபையினருடைய சிறப்பான செயற்பாடுகளும் ஒன்று சேர ஆண்டு தோறும் மாயவன் தேரில் வருகின்ற திருக்காட்சியை எண்ணும் போது தொண்டர் அடிப்பொடி ஆழ்வாரின் பின்வரும் பாடல்தான் நினைவுக்கு வரும்.

**“வல்லிபுர மாயவன் தேரில் வருகிறான்**
**தொல்லையெல்லாம் போக்கவே நேரில் வருகிறான்**
**எல்லையில்லா பக்தி வெள்ளத்திலே**
**வங்கக் கடல் நாயகன் எங்கள் மாயவன்**
**பங்கமின்றி என்றும் காக்க தேரில் வருகிறான்.”**

# இன்றைய ராசி பலன்கள் - 16.09.2024




இன்று மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

உங்கள் பனியின் தரத்தில் உங்கள் திறமை பிரதிபலிக்கும். நீங்கள் பணியை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வீர்கள். அவரும் பதிலுக்கு உங்களுடன் அன்பாய் நடந்து கொள்வார்.

அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். சேமிப்பதற்கும் சாதகமான வாய்ப்புகள் காணப்படும்.

இன்று உங்களிடம் மன உறுதி காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் இலட்சியங்கள் பூர்த்தி யடைந்து மகிழ்ச்சி கிடைக்கும் நாள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். உங்கள் அணுகுமுறையில் தன்னம்பிக் கையும் நகைச்சுவை உணர்வும் வெளிப் படும்.

பணியில் திருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரி களின் பாராட்டு கிடைக்கும் சிறந்த வாய்ப்பு காணப்படு கின்றது.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தை களை பகிர்ந்து கொள்வீர்கள். உறவில் பரஸ்பர அன்பு காணப்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பண வரவுக்கான அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நேர்மறையான உங்கள் மனநிலை உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று பொறுமையாக இருக்க வேண்டும். அனைத்து விஷயங்களிலும் சகஜமாக இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் ஆறுதல் பெற முடியும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகளைக் குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உங்கள துணையுடனான உறவின் மகிழ்ச்சி பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். கூடுதல் பொறுப்பு காரணமாக வங்கியிருப்பை சிறப்பாக பரா மரிக்க இயலாது.

கணுக்கால்களில் வலி காணப்படலாம்.தகுந்த மருத்துவ சிகிச்சை மூலம் குணம் பெறலாம்




ஆன்மீக காரியங்களில் ஈடுபடுவ தற்கு உகந்த சூழ்நிலை காணப்படும். அதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள். உங்களுக்கு சாதகமாக நிகழ்வுகள் அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரண மாக பணியில் தவறு செய்வீர்கள். உங்கள் மேலதிகாரிங் களின் நன்மதிப்பை பெற நீங்கள் கவனமாக பணி யாற்ற வேண்டும்.

உங்கள துணையிடம் சகஜமாகப் பேசுவீர்கள். இதனால் உங்கள் கருத்துக்களை வெளிபடையாக கூற இயலும். இதனால் நல்லுறவு உருவாகும்.

பொருளாதார பாதுகாப்பிற்காக நீங்கள் போதிய அளவு பணம் சேமிக்க வேண்டும். பண வரவு குறிப்பிடும் வகை யில் காணப்படாது.

உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.




இன்று உங்களுக்கு மிகவும் சாதக மான நாள். நீங்கள் சுமூகமாகச் செயல்பட வேண்டும். வாழ்க்கையின் சரியான மற்றும் தவறான விஷயங்களை பிரித்தறிய வேண்டும்.

உங்களின் கடின உழைப்புக்கு உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நல்ல புரிந் துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். இதனால் உங்களிடம் போதிய பணம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர் கள்.




இன்று முன்னேற்றமான நாள். எதிர்காலம் பற்றிய பரந்த நோக்கு கொண்டிருப்பீர்கள். உங்கள் இலக்கு களில் வெற்றி பெற கடினமாக உழைப் பீர்கள். இடையில் ஏற்படும் தடைகளை முறியடிப்பீர்கள்.

இன்று பலன் எதையும் எதிர்பார்க்காமல் பணியாற் றுங்கள். இதன் மூலம் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து தர இயலும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியம்.

உங்கள் துணையிடம் நேர்மையாக விசுவாசமாக இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் அபரிமிதமாக காணப்படும். இன்று வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். உங்கள் ஆற்றலை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள்.




இன்று குழப்பமான எண்ணங்கள் காணப்படும். இதனால் நீங்கள் கட்டுப் பாட்டை இழப்பீர்கள். பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள். பக்திப் பாடல்கள் கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் கடினமான சூழ் நிலையை சந்திப்பீர்கள். பணியில் உயர்வு காண திட்ட மிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படு வீர்கள். இது உறவின் அம்சத்தை பாதிக்கும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். குடும்ப நலனுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

அஜீரணக் கோளாறு மற்றும் கால் வலி காணப்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சரிவிகித உணவை உட்கொள்ள வேண்டும்.




இன்று வெற்றி பெறுவதற்கு தைரிய மும் உறுதியும் தேவை. உங்கள் இலக்குகளை அடைய இவற்றை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணியில் நற்பலன் காண கவன மாக பணியாற்ற வேண்டும். நீங்கள் பணியில் தவறு செய்ய நேரலாம். உங்கள் பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக் கல்கள் காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். இன்று கூடுதல் செலவு காணப்படும். இது தேவையற்ற செலவாக இருக்கும்.

போதிய தூக்கமின்மை காரணமாக கால் வலியால் இன்று நீங்கள் பாதிக்கபடலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.09.2024




இன்று உங்கள் முயற்சி மூலம் நன்மையான விஷயங்களைப் பெறுவீர்கள். சிறந்த அதிர்ஷ்டத்தை நீங்கள் எதிர்பார்க்கலாம். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளிடம் நல்ல பெயரெடுப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் இன்றைய நாளை நீங்கள் இனிமையாக ஆக்கலாம். இந்த மகிழ்ச்சியின் காரணமாக உங்கள் இருவரிடையே நெருங்கிய பிணைப்பு ஏற்படும்.

இன்று கணிசமான பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு நிலை உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எழும் வேறுபாட்டை தீர்க்க பக்குவமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். மாறுபடும் சூழ்நிலைகேற்ப இன்று நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் நீங்கள் சிறிது போராட்டங்களை சந்திக்க வேண்டியிருக்கும். பணிகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை விழிப்புடன் கையாள வேண்டும்.

கண் எரிச்சல் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். அஜீரணக் கோளாறு காணப்படும்.




இன்று சில விஷயங்களை நீங்கள் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். தேவையற்ற கவலைகள் காணப்படும். இதனால் மனக்குழப்பம் ஏற்படும்.

அதிக வேலைகள் உங்களுக்கு கவலையை உண்டாக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்துகொள்ள வேண்டும். நல்ல புரிந்துணர்விற்கு இது மிகவும் அவசியம்.

பண வரவு குறைந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நேர்மறையான எண்ணங்கள் காரணமாக உங்கள் மன ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இந்த மன்நிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று முக்கிய நிகழ்வுகளை தவிர்க்க வேண்டும். இன்று உங்களிடம் அமைதியின்மை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணிகளை நேரத்தோடு முடிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

நீங்கள் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் துணையுடன் சிறிது வன்மையாக உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் தக்க வைக்க இந்த உணர்வை தவிர்க்க வேண்டும்.

அதிக பொறுப்புகள் காரணமாக குடும்பத்துக்குச் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park